# 9

# “இதுவே அதுவாக உள்ளது!”

*“அப்பொழுது பேதுரு ... அவர்களை நோக்கி ... தீர்க்கதரிசியாகிய யோவேலினால் உரைக்கப்பட்டபடியே இது நடந்தேறுகிறது ... (என்று கூறினார்)” (அப். 2:14-16).*

நீங்களும் நானும் பத்து மனிதர்களை வழக்கத்திற்கு மாறான ஒரு அனுபவம் பெறும்படி ஒன்றுகூட்டி இருப்பதாகக் கற்பனை செய்து கொள்ளுங்கள். இந்த மனிதர்கள் நள்ளிரவு வேளையில் நம்முடன் ஒரு பெரிய நிலப்பகுதியில் நின்று கொண்டுள்ளனர். அந்த மனிதர்களிடத்தில், “நீங்கள் நின்றிருக்கும் இடத்திலிருந்து நூறு கெஜம் (நூற்று ஐம்பது அடிகள்) தொலைவில் இரண்டு இன்ச்சுகள் (ஐந்து சென்டி மீட்டர்கள்) விட்டமுள்ள ஒரு திடமான கறுப்பு வட்டம் ஒன்றை மையமாகக் கொண்ட இலக்கு ஒன்றுள்ளது. அந்த இலக்கானது உங்கள் வலது புறத்திலோ அல்லது இடது புறத்திலோ இருக்கக் கூடும்; அது உங்களுக்கு முன்பாகவோ அல்லது பின்பாகவோ இருக்கக் கூடும். உங்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு வில்லும் பத்து அம்புகளும் தரப்படும். நீங்கள் யாரும் அந்த இலக்கு இருக்குமிடத்தை அறியாதிருப்பினும், இருளின் காரணமாக அதை நீங்கள் காண முடியாதிருப்பினும், உங்களில் யாராவது ஒருவர் அந்த இலக்கின் மையப் பகுதியில் உங்கள் அம்புகளில் ஒன்றை எய்வதை நாங்கள் காண விரும்புகின்றோம்” என்று கூறப்படுகின்றது.

ஒவ்வொருவராக அந்தப் பத்து மனிதர்களும் எழுந்து நின்று தங்கள் அம்புகளை எய்கின்றனர், உண்மையில் அவர்கள் இரண்டு இன்ச்சுகள் அளவிலான கறுப்பு வட்டத்திற்காக இருளில் ஊடுருவுகின்றனர். சிலர் வலது புறமும், சிலர் இடது புறமும் (அம்பை) எய்கின்றனர். சிலர் தங்களுக்கு முன்னால் அம்பை எய்கின்றனர்; சிலர் திரும்பி, தங்களுக்குப் பின்னால் எய்கின்றனர். நிறைவாக, நூறு அம்புகள் காணப்படாத மின்னல் வரிகள் போல் இரவின் இருளுக்குள் எய்யப்படுகின்றன. பிறகு, நம்முடைய ஒளி தரும் விளக்குகளுடன் நாம் நடந்து இலக்கைக் கண்டறியத் தேடுகின்றோம்.

எத்தனை அம்புகள் இலக்கை நோக்கிச் சரியாகப் பாய்ந்திருக்கும் என்று நீங்கள் எண்ணுகின்றீர்கள்? நீங்கள் முழு நம்பிக்கையுடன் “ஒன்றும் இல்லை. ஒரு அம்பு கூட இலக்கைச் சென்றடைந்திராது” என்று கூறலாம். மேலும் நீங்கள், “உதவி பெறாத மனிதர்கள் தாங்கள் காண முடியாத இலக்கின் மீது

அம்பெய்ய முடியாது" என்றும் கூறலாம். நிச்சயமாகவே, நீங்கள் சொல்வது சரியானதே. இருப்பினும், இந்த உண்மையைச் சிந்தித்துப் பாருங்கள்: மனிதர்கள் செய்ய முடியாதவற்றை, தேவன் ஏவுதல் பெற்ற மனிதர்களைச் செய்ய வைத்தார்!

பழைய ஏற்பாட்டுக் காலங்கள் மற்றும் இயேசுவின் ஊழியத்தின் நாட்கள் ஆகியவற்றின் பொழுது, பரிசுத்த ஆவியானவரின் தெய்வீக வில்லில் இருந்து தீர்க்கதரிசன அம்புகள் எதிர்காலத்தை நோக்கி வேகமாய்ப் பாய்ந்தன. பிற்பாடு, காலத்தின் கரத்தினால் எதிர்காலத்தின் திரையானது தள்ளப்படுகையில், ஒவ்வொரு அம்பும் தனது இலக்கை மிகச் சரியாகவும் முழுமையாகவும் தாக்கிற்று.

எதிர்கால நிகழ்ச்சிகளில் மக்களையும் இடங்களையும் அடையாளப் படுத்தும் பெயர்த் தீர்க்கதரிசனங்கள் சில இருந்தன; மற்றவைகள் அத்தீர்க்கதரிசியின் நாளையும் மற்றும் மேசியாவின் நாளையும் பற்றிய செய்திகளைக் கொண்ட இரட்டைத் தீர்க்கதரிசனங்களாய் இருந்தன. இன்னும் மற்றவை, அவற்றிற்கிணையிலுள்ள மாறுதலைகளை வெளிப் படுத்தும் மாதிரித் தீர்க்கதரிசனங்களாய் இருந்தன. தீர்க்கதரிசன வகை எதுவாயிருப்பினும், ஒவ்வொரு தீர்க்கதரிசன அம்பும் அதன் இலக்கினு டைய மிகச் சரியான மையத்தைத் தாக்கின.

பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசனங்களில் சபையானது, "சபை" என்ற சொற்றொடரினால் ஒருக்காலும் குறிப்பிடப்படவில்லையென்றாலும், அது மறைகருத்துக்களினால் அடிக்கடி அடையாளப்படுத்தப்பட்டது (ஆமோ. 9:11) மற்றும் அது சில வேளைகளில் "நித்திய இராஜ்யம்" (தானி. 2:44) என்ற திட்டவட்டமான சொற்றொடரினாலோ அல்லது "புதிய உடன்படிக்கை" (எரே. 31:31) அல்லது "கர்த்தருடைய ஆலயமாகிய பர்வதம்" (ஏசா. 2:2) என்பது போன்ற அதே வகையான சொற்றொடர்களினாலோ அடையாளப் படுத்தப்பட்டது. வருவதாயிருந்த இராஜ்யமானது பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசனத்தில் தனிச்சிறப்பானதொரு இடத்தைப் பெற்றிருந்தது.

அணுகிக் கொண்டிருந்த ''இராஜ்யம்'' ஒன்றின் சித்தரிப்புடன் இம்மூன்று வகையான தீர்க்கதரிசனங்களும் சபையின் வருகையைப் பற்றி முன்னுரைப்பதற்காகப் பரிசுத்த ஆவியானவரால் பயன்படுத்தப்பட்டன. நாம், சபையைப் பற்றிய மிகவும் பழக்கமான ஒரு இரட்டைத் தீர்க்க தரிசனத்தைக் கருத்தாய் ஆராய்ந்து, அது சபையின் அற்புத விதமான தொடக்கத்தை எவ்வாறு குறிப்பிடுகின்றது என்பதை உற்று நோக்குவோம்.

## பொருள் விளக்கம்:
## வசனப்பகுதி கூறுவது என்ன?

பெந்தெகொஸ்தே நாளன்று, பேதுரு தம் பிரசங்கத்தில், யோவேலின் புகழ் பெற்ற தீர்க்கதரிசனத்தை மேற்கோள் காண்பித்தார் (அப். 2:16-21; யோவே. 2:28-32). அந்தத் தீர்க்கதரிசனமானது, "கடைசி நாட்களின் யுகம்" என்பது பரிசுத்த ஆவியானவருடைய அற்புதமான இறங்குதலுடன் தொடங்கும் என்று சுட்டிக் காண்பித்தது.

## *நிறைவேற்றத்தின் இயல்பு*

யோவேலின் வெளிப்படுத்துதல் ஒரு இரட்டை அல்லது இருகூற்றுத் தீர்க்கதரிசனமாய் உள்ளது: அது, யோவேலின் நாட்களில், தேவனுடைய மக்கள் தங்கள் பாவத்திலிருந்து மனந்திரும்பி தேவனிடத்திற்குத் திரும்பினால் அவர்கள் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களைப் பெறுவார்கள் என்ற தேவனுடைய வாக்குத்தத்தத்தைக் கொண்டிருந்தது. அது, எதிர்காலப் பயன்பாட்டில், ஒரு புதிய யுகத்தை அல்லது சகாப்தத்தைத் தொடங்கி வைக்கும் வகையில் பரிசுத்த ஆவியானவர் விசேஷமாய்ப் பொழிந்தருளப் படும் ஒரு நாளைச் சுட்டிக்காண்பித்தது.

பரிசுத்த ஆவியானவரின் இந்த ஞானஸ்நானம் பற்றி அப்போஸ்தலர் கள், யோவான் ஸ்நானகனாலும் இயேசுவாலும் முன்னதாகவே உணர்த்தப்பட்டிருந்தார்கள். யோவான், தம் குறுகிய காலப் பிரசங்க ஊழியத்தின் மத்தியில், "மனந்திரும்புதலுக்கென்று நான் ஜலத்தினால் உங்களுக்கு ஞானஸ்நானங் கொடுக்கிறேன்; எனக்குப் பின் வருகிறவரோ என்னிலும் வல்லவராயிருக்கிறார், அவருடைய பாதரட்சைகளைச் சுமக்கிறதற்கு நான் பாத்திரன் அல்ல; அவர் பரிசுத்த ஆவியினாலும் அக்கினியினாலும் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார்" (மத். 3:11) என்று கூறியிருந்தார். இயேசு உயிர்த்தெழுந்த பிறகு அளித்த தம் செய்திகளில், தமது அப்போஸ்தலர்களுக்குப் பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்தை மீண்டும் வாக்களித்தார், அதை அவர் "பிதாவின் வாக்குத்தத்தம்" என்று குறிப்பிட்டார். அப். 1:4, 5 வசனப்பகுதியானது, "... யோவான் ஜலத்தினாலே ஞானஸ்நானங் கொடுத்தான்; நீங்கள் சில நாளுக்குள்ளே பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் பெறுவீர்கள். ஆகையால் நீங்கள் எருசலேமை விட்டுப் போகாமல் என்னிடத்தில் கேள்விப்பட்ட பிதாவின் வாக்குத்தத்தம் நிறைவேறக் காத்திருங்கள் என்று கட்டளையிட்டார்" என்று கூறுகின்றது. இன்னும் மற்றொரு வேளையில் அவர்களிடத்தில் அவர், "என் பிதா வாக்குத்தத்தம் பண்ணினதை, இதோ, நான் உங்களுக்கு அனுப்புகிறேன். நீங்களோ உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும் வரைக்கும் எருசலேம் நகரத்தில் இருங்கள்" (லூக். 24:49) என்று கூறினார். பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்தைத் தம்முடைய அப்போஸ்தலர்களே பெற்றுக் கொள்வார்கள் என்று குறிப்பிட்டதன் மூலம் அந்த ஞானஸ்நானத்தைப் பெறுபவர்களைப் பற்றி இயேசு யோவான் ஸ்நானனைக் காட்டிலும் அதிக திட்டவட்டமாகக் குறிப்பிட்டார்.

## *நிறைவேற்றத்தின் அர்த்தம்*

அப். 2ன் தொடக்கத்தில், பரலோகத்திலிருந்து பரிசுத்த ஆவியானவர் அப்போஸ்தலர்களின் மீது பொழியப்படுகையில், அவர்கள் யோவேலின் வாக்குத்தத்தத்தினுடைய நிறைவேற்றத்தை அனுபவித்தார்கள். லூக்கா, "அல்லாமலும் அக்கினிமயமான நாவுகள் போலப் பிரிந்திருக்கும் நாவுகள் அவர்களுக்குக் காணப்பட்டு, அவர்கள் ஒவ்வொருவர் மேலும் வந்து அமர்ந்தது. அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு,

ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத் தொடங்கினார்கள்" (அப். 2:3, 4) என்று எழுதினார். இந்தப் பொழிந்தருளலானது "பலத்த காற்று அடிக்கிற முழக்கம் போன்ற" (அப். 2:2) சத்தத்துடன் கூட வந்தது. பெந்தெகொஸ்தே நாளைக் கடைப்பிடிப்பதற்காக எருசலேமில் கூடியிருந்த மக்கள் கூட்டமானது இந்த சத்தத்தைக்கேட்டு, ஒன்றாய்க் கூடி, என்ன நடந்து கொண்டிருந்தது என்று விசாரித்தார்கள். அவர்கள் ஒன்றுகூடி வருகையில், அக்கூட்டத்தாரின் பல்வேறுபட்ட வட்டார மொழிகளிலும்கூட அப்போஸ்தலர்கள் தேவனுடைய மகத்துவங்களைப் பேசக் கேட்டு திகைப்படைந்தார்கள்.

கூட்டத்தார் தாங்கள் கண்டவை மற்றும் கேட்டவை ஆகியவற்றினால் பெரிதும் கலக்கமுற்றார்கள், கூட்டத்தில் சிலர், ஒருவேளை தங்கள் பயம் மற்றும் அறியாமையினால், அப்போஸ்தலர்கள் மதுபானம் அருந்தியிருந்த தாகக் குற்றம் சாட்டினார்கள். பேதுரு அந்த நாட்களில் உலகளாவிய மொழியாய் இருந்த கிரேக்க மொழியில் பேசி, அவர்களின் கவனத்தை ஈர்த்து, இயேசுவே கிறிஸ்து என்பதற்கான சான்றை அவர்களுக்கு முன் வைத்தார். அவர் பரிசுத்த ஆவியானவரால் வழிநடத்தப்பட்டு, பரிசுத்த ஆவியானவரின் அந்தப் பொழிந்தருளலானது யோவேல் தீர்க்கதரிசனத்தின் நிறைவேற்றமாயிருந்ததாக விளக்கினார். அவரது வார்த்தைகள் யோவேலின் தீர்க்கதரிசனத்தில் எல்லாக் காலத்திற்குமான முக்கிய அர்த்தத்தைத் தெளிவாக்குகின்றன: "தீர்க்கதரிசியாகிய யோவேலினால் உரைக்கப்பட்டபடியே இது நடந்தேறுகிறது'' (அப். 2:16). முந்திய தலைமுறை ஒன்றில் நன்கு அறியப்பட்ட பிரசங்கியாரான ஃபோய் L. வாலஸ் அவர்கள், "பேதுரு, 'சங்கதி இதுவே!' என்று கூறினார்" என்பதாகச் சொன்னார். ஒரு புது யுகம், சபையின் யுகம் தொடங்கிக் கொண்டிருந்தது. ஏவப்பட்ட அப்போஸ்தலரான பேதுரு, நமக்காக யோவேலின் தீர்க்கதரிசனத்தின் அர்த்தத்தைப் பொருள்விளக்கப்படுத்தியுள்ளார். அவருடைய மிகவும் தெளிவான விளக்கமானது தீர்க்கதரிசனத்திற்குப் பரிசுத்த ஆவியானவரின் சுயபொருள் விளக்கத்தை நமக்குத் தருகின்றது.

மனித குல வரலாறானது படைப்பின் அற்புதங்களுடன் தொடங்கியது - அதில் தேவனுடைய கரத்தினால் ஆணும் பெண்ணும் வடிவமைக்கப் பட்டார்கள். அப். 2ல், இப்பூமியின் மீது தேவனுடைய ஆவிக்குரிய இராஜ்யத்தின் தொடக்கத்தில், பரிசுத்த ஆவியானவரால் சபை வடிவமைக் கப்பட்ட பொழுது, அற்புத நிகழ்வானது மீண்டும் காணப்படுகின்றது.

## நிறைவேற்றத்தின் முழுமைத் தன்மை

பெந்தெகொஸ்தேயன்று யோவேலின் தீர்க்கதரிசனம் யாவும் நிறைவேற்றப்படவில்லை என்பது உண்மையாக உள்ளது, ஏனெனில் குமாரர்கள், குமாரத்திகள், மூப்பர்கள், இளைஞர்கள் மற்றும் ஊழியக் காரர்கள் ஆகியோர் பரிசுத்த ஆவியானவரைப் பெறுவார்கள் என்று யோவேல் கூறினார் மற்றும் தரிசனங்களைக் காணுதல், கனவுகளைக் காணுதல் ஆகியவை பற்றியும் முன்னுரைத்தார். அந்த நாளில் ஆவியானவர் இவ்விதமாய் ஊற்றப்பட்ட பதிவு எதுவும் நமக்கு இல்லை. கூடுதலாக,

யோவேல் வெளிப்படுத்தும் மொழிநடையில் ஒருவேளை, தம் தீர்க்க தரிசனத்தின் பிற்பகுதியில் நியாயத்தீர்ப்பிற்கு வரும் நாளைப் பற்றியும் குறிப்பிட்டிருந்தார். யோவேலின் தீர்க்கதரிசனத்தில் சில நிகழ்ச்சிகளே பெந்தெகொஸ்தே நாளன்று நடைபெற்றிருக்க வேண்டும். என்றால் பிறகு, "தீர்க்கதரிசியாகிய யோவேலினால் உரைக்கப்பட்டபடியே இது நடந்தேறுகிறது" என்ற பேதுருவின் வார்த்தைகளை நாம் எவ்வாறு புரிந்து கொள்ள வேண்டும்?

"கடைசி நாட்களின்" அற்புத விதமான தொடக்கம் பற்றிய யோவேலின் தீர்க்கதரிசனத்தின் *இருதயம்* போன்ற மையப் பகுதியானது அந்த நாளில் நிறைவேறியது என்று பேதுரு அறிவித்தார். இயற்கைக்கு அப்பாற்பட்ட இந்த நிகழ்ச்சியினால் அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்தைப் பெற்றனர். இந்த ஞானஸ்நானம் அவர்களைத் தேவனுடைய வெளிப்படுத்துதலை மனிதர்களுக்குக் கொடுக்க (அப். 2:22-36), பரிசுத்த ஆவியானவரை மற்றவர்களுக்குக் கொடுக்க (அப். 8:14, 15) மற்றும் தாங்கள் பேசிய செய்திகளை அற்புதங்களினால் உறுதிப்படுத்த(எபி. 2:2-4)ப் பெலம் அளித்தது. ஆகையால், பெந்தெகொஸ்தேயன்று அப்போஸ்தலர்களின் மீது பரிசுத்த ஆவியானவர் இறங்கி வந்த இந்த நிகழ்ச்சியானது கிறிஸ்தவ யுகத்தின் தொடக்க காலத்தில் *அற்புதத்தின் நீரோடையை உண்டாக்கும் தாய் நீரூற்றாய்* இருந்தது. தொடர்ந்து வந்த நாட்களில் அப்போஸ்தலர்கள் மற்ற கிறிஸ்தவர்களின் மீது கரங்களை வைத்து, அவர்களுக்குப் பரிசுத்த ஆவியானவரின் வரங்களைத் தருபவர்களாய் இருந்தனர். இந்த வரம் தருதலானது குமாரர்களையும், குமாரத்திகளையும், மூப்பர்களையும், இளைஞர்களையும், ஊழியக்காரர்களையும், ஊழியக்காரிகளையும் தீர்க்கதரிசனம் உரைக்கச் செய்வதாயிருந்தது.

தேவன் தம்முடைய ஆவியானவரை "யாவர் மேலும்" (அப். 2:17; யோவே. 2:28) ஊற்றுவார் என்று யோவேல் கூறியிருந்தார். அவருடைய தீர்க்கதரிசனத்தின் இந்தப் பகுதியானது பிரதிநிதித்துவப் படுத்தும் வகையில் உறுதியாகவே நிறைவேற்றப்பட்டது. பெந்தெகொஸ்தேயன்று அப்போஸ் தலர்கள் யூதர்களின் இனத்திற்குச் சார்பாக நின்றிருந்தனர் (அப். 2), மற்றும் கொர்நேலியுவின் வீட்டாருக்குப் பரிசுத்த ஆவியானவர் ஊற்றப்படுதலைத் தேவன், புறஜாதியாரும் தேவனுடைய இராஜ்யத்தைப் பெறுவார்கள் என்பதை வெளிப்படுத்தப் பயன்படுத்தினார் (அப். 10). ஆகையால், பெந்தெகொஸ்தேயன்று அப்போஸ்தலர்களிடத்திலும், பிற்பாடு கொர் நேலியுவின் வீட்டார் மற்றும் நண்பர்கள் ஆகியோரிடத்திலும் தேவன் தம்முடைய ஆவியானவரை ஊற்றியது "யாவர் மீதும்" ஊற்றப்படுதலின் பிரதிநிதித்துவங்களாய் இருந்தன.

## *நிறைவேற்றத்தின் தெளிவு*

இந்த ஊற்றப்படுதலைக் குறித்து, இதன் அர்த்தத்தைக் குறித்து எவரொருவரும் குழப்பமடையத் தேவையில்லை. இது யோவேலின் தீர்க்கதரிசன நிறைவேற்றமாய் இருந்தது என்று தவற்ற வகையில்,

ஏவப்பட்ட அப்போஸ்தலர் விளக்கப்படுத்தினார். அந்த நிகழ்ச்சி பற்றிய பேதுருவின் ஏவுதல் பெற்ற விளக்கத்தினால் நாம் அந்த நிகழ்ச்சியானது "கடைசி நாட்களின்" தொடக்கமாய் இருந்தது என்று நிச்சயப்படுத்திக் கொள்ள முடியும். பெந்தெகொஸ்தே நாளன்று பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம் என்பது தீர்க்கதரிசிகள் யாவரும் தாங்கள் தீர்க்கதரிசனம் கூறியிருந்ததும், ஆவலுடன் எதிர்நோக்கியிருந்ததுமான ஒரு சிறப்பான யுகத்தின் தொடக்கமாய் இருந்தது.

அப்போஸ்தலர்களின் மீது அற்புத விதமாகப் பரிசுத்த ஆவியானவரைப் பொழிந்தருளுவதாலும் மற்றும் இவ்விதமாக மனித வரலாற்றின் கடைசிப் பிரிவைத் தொடங்குவதாலும் தேவன் புதிய உடன்படிக்கையை அதனிடத்தில் அமைத்து வைக்கத் தேர்ந்து கொண்டார். அவருடைய சித்தமானது எழுதப்பட்ட அவருடைய வெளிப்படுத்துதலானது மனிதனுக்கு முழுமையாய் வெளிப்படுத்தப்பட்டவுடன் மற்றும் சபையின் யுகமானது முழுமையாய்த் தொடங்கியவுடன், அற்புதங்கள் ஒழிந்து போயின, ஏனெனில் அவைகளின் மூலம் உறுதிப்படுத்துதல் என்பது இனியும் தேவையற்றதாகி விட்டது (1 கொரி. 13:8-10). அற்புதங்களின் யுகம் முடிந்துள்ளது, ஆனால் சபையின் யுகமானது "பூமியின் வரலாற்றினுடைய" கடைசி யுகமான காலங்களின் முடிவு வரையிலும் தொடரும்.

## விவரிப்பு:
## வசனப் பகுதி அர்த்தப்படுத்துவது என்ன?

ஒருவேளை ஒரு மனிதர், வர இருந்த தேவனுடைய இராஜ்யம் பற்றிப் பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசனங்களைப் படித்திருந்து, ஆனால் அந்தத் தீர்க்கதரிசனங்களைப் பற்றிப் பிரமிப்பு அடைந்துள்ளார் என்று வைத்துக் கொள்வோம். அவர் வரவிருந்த இராஜ்யம் எது போலக் காணப்படும் என்பதில் நிச்சயமற்றவராய் இருக்கின்றார். தீர்க்கதரிசனத்தின் இந்தத் தலைப்பைப் புரிந்து கொள்ள, மற்றும் தெளிவாக்கிக்கொள்ள அவர் எங்கு திரும்ப முடியும்?

இம்மனிதர் அப். 2ன் பக்கம் திரும்ப முடியும். சக்கர அச்சின் மையம் போன்ற இந்த அதிகாரமானது இந்த தீர்க்கதரிசனங்கள் எல்லாவற்றின் நிறைவேறுதலின் தொடக்கத்தை அவருக்குக் காண்பிக்கும். வருவதாயிருந்த இராஜ்யமானது எதைப் போன்று காணப்படும் என்பதில் அவர் குழப்பம் அடைந்தவராய் இருந்தால், அப். 2வது அதிகாரமானது, வருவதாயிருந்த அந்த இராஜ்யத்தைத் தேவனுடைய சித்தரிப்பானது அதன் "வந்திருந்த நிலையில்" காண்பிக்கும். இராஜ்யம் எதைப் போன்றதாயிருக்கும் என்பதில் அவர் நிச்சயமற்றவராயிருந்தால், மக்கள் எவ்வாறு வருவதாயிருந்த இராஜ்யத்தின் தீர்க்கதரிசனங்களின் தெய்வீக நிறைவேறுதலின் சபையாக வாழ்ந்தனர் என்பதை அவருக்கு அப். 2 காண்பிக்கும்.

1975ல் ஒரு பிரசங்க முகாமிற்காக நான் சிங்கப்பூருக்கு அழைக்கப் பட்டிருந்தேன். அழகிய நாடான சிங்கப்பூர் பற்றி நாங்கள் கேள்விப் பட்டிருந்தோம், ஆனால் அதை ஒருக்காலும் (இதற்கு முன்) பார்த்ததில்லை.

சிங்கப்பூரில் நீண்ட காலம் ஊழியம் செய்துள்ள கார்டன் ஹோகன் அவர்கள் அங்குள்ள சபையுடன் இருந்தார், அவர் நாங்கள் முகாமிற்காகத் தயார் செய்து கொள்வதற்கு, அதைப் பற்றிய விபரங்களை எங்களுக்கு அனுப்பினார். ஆராதனைக் கூட்டங்கள், மக்கள் மற்றும் சூழ்நிலைகளை மனக்கண்ணால் காண்பதற்கு நான் முயற்சி செய்தேன். நான் பிரசங்கிக்க விருந்த (அந்த) நாடு மற்றும் மக்கள் பற்றிய தகவல்களைச் சேகரித்தேன். அந்த முகாமிற்கு முன்னதாக ஆறு மாத காலங்களின் போது, கடிதங் களையும், பயன்படுத்தப்பட்ட விளம்பரத் துணுக்குகளையும் மற்றும் வரவேற்புக் குறிப்புகளையும் நாங்கள் வரவேற்கப் பெற்றோம். இவை

---

*பெந்கொஸ்தே நாளன்று பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம் என்பது தீர்க்கதரிசிகள் யாவரும் தாங்கள் தீர்க்கதரிசனம் கூறியிருந்ததும், ஆவலுடன் எதிர்நோக்கியிருந்ததுமான ஒரு சிறப்பான யுகத்தின் தொடக்கமாய் இருந்தது.*

---

எல்லாவற்றையும் ஒன்று கூட்டி வைத்து, முகாமானது எதைப் போன்று இருக்கும் என்று சித்தரிக்க நாங்கள் முயற்சி செய்தோம். கடைசியாக, அமெரிக்காவில் இருந்து நாங்கள் புறப்பட வேண்டிய நாள் வந்தது. இருபத்து நான்கு மணி நேரங்கள் (விமானத்தில்) பறந்த பிறகு, நாங்கள் சிங்கப்பூர் சென்றடைந்தோம். அங்கு நடைபெற்ற முதல் ஆராதனைக் கூட்டத்தின் போது, “இப்பொழுது நான் இது எதைப் போன்றுள்ளது என்று காண்கின்றேன். இப்பொழுது நான் புரிந்து கொள்ளுகின்றேன்” என்று கூற முடிந்தது.

ஒருவர் பழைய ஏற்பாட்டைப் படித்து, வருவதாயிருந்த இராஜ்யத்தைப்பற்றி பல தீர்க்கதரிசனங்களை ஆழ்ந்து சிந்திக்கையில், அந்த இராஜ்யம் வரும்போது எவ்வாறு இருக்கும் என்பதை மனக்கண் முன் கொண்டு வர அவர் முயற்சி செய்யலாம். சபையின் தொடக்கம் பற்றிய வடிவில் இராஜ்யத்தின் தொடக்கத்தினுடைய அடையாளப்படுத்துதலைப் பேதுருவின் ஏவுதல் பெற்ற மொழிநடையில் அவர் அப். 2ல் காண்கையில், அவர், “தேவன் தம்முடைய தீர்க்கதரிசனங்களில் அர்த்தப்படுத்தியது என்ன என்பதை நான் இப்பொழுது காண்கின்றேன். இப்பொழுது நான் புரிந்து கொள்ளுகிறேன்” என்று கூற முடியும். இராஜ்யத்தின் சித்தரிப்பைத் தேவன் அதன் உண்மை வடிவத்தில் அப். 2ல் நமக்குக் கொடுத்திருப்பதற்காக நாம் எவ்வளவு நன்றியுள்ளவர்களாய் இருக்க வேண்டும்!

பழைய ஏற்பாட்டில் தீர்க்கதரிசிகளால் முன்னுரைக்கப்பட்ட இராஜ்யம் இன்னும் வரவில்லை என்று யாராவது தர்க்கம் செய்வாரானால், அவரால் தவறாக வழி நடத்தப்பட வேண்டாம். அப்போஸ்தலர் 2ம் அதிகாரத்தை எடுத்து, இந்தத் தீர்க்கதரிசனங்களின் அற்புதமான நிறைவேறுதல்களைப் பற்றி அதில் வாசியுங்கள். அப். 2 ஆனது, இராஜ்யம் வந்திருக்கிறது என்பதை

நிரூபிப்பது மாத்திரமல்லாது, தேவன் தம்முடைய இராஜ்யம் எப்படியிருக்க வேண்டும் என்று விரும்பினார் என்பதையும் அது கூறுகிறது.

## உள்ளாக்கம்:
## வசனப் பகுதி நம்மிடம் கேட்டுக் கொள்வது என்ன?

இவ்வசனப் பகுதிக்கு நாம் எவ்விதத்தில் பதில்செயல் செய்ய வேண்டும்? இது வாழ்வில் எவ்விதத்தில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்?

முதலாவதாக பழைய ஏற்பாட்டின் தீர்க்கதரிசனத்தினுடைய இந்த நிறைவை நமக்குள் *அலைபாய்வற்ற உறுதிப்பாட்டினை* நிலைநிறுத்தும் படியாக அனுமதிக்க வேண்டும். சபையின் தொடக்கம் பற்றிய நமது விசுவாசமானது உறுதியானதாகவும் அசைக்க முடியாததாகவும் இருக்க வேண்டும். தேவன் தம் ஆவியானவரை அற்புதமாகப் பொழிந்த நிகழ்வினால் அதன் (சபையின்) தொடக்கத்தை அறிவித்துள்ளார். தேவன் தம்முடைய சபையின் தொடக்கத்தை வெளிப்படுத்த இதைக்காட்டிலும் மேன்மையான வேறெந்த வழியைப் பயன்படுத்தியிருக்க முடியும்? தேவன் தம் இராஜ்யத்தின் வருகை பற்றி இதை விட வலிவாக வேறெந்த முறையில் வெளிப்படுத்தியிருக்க முடியும்?

இரண்டாவதாக, பெந்தெகொஸ்தேயன்று, யோவேலின் தீர்க்கதரிசன நிறைவேற்றமானது *குடியுரிமை பற்றிய அசைக்க முடியாத ஒரு கருத்துணர்வை* நமக்குள் உண்டாக்க வேண்டும். தேவனுடைய இராஜ்யம் வந்துள்ளது மற்றும் நாம் அதனுள் இருக்க முடியும் என்ற உறுதிப்பட்ட அறிவுடன் இப்பொழுது நாம் வாழ முடியும். தேவனுடைய ஆவியானவர் பொழியப்பட்ட நிகழ்ச்சியில் பொதிந்துள்ள தேவனுடைய சாட்சியத்தை நாம் ஏற்றுக் கொண்டால், நாம் தேவனுடைய இராஜ்யத்தின் குடி மக்களாகி, அவ்விதமாகவே வாழ முடியும் என்ற மகிழ் நிறைவான உணர்ந்தறிதலுடன் நாம் வாழ முடியும். இந்தத் தீர்க்கதரிசனமும் மற்றும் இதன் நிறைவேற்றமும் நமக்கு, இராஜ்யத்தின் அடையாளம், தனிச்சிறப்பு மற்றும் தோற்றம் ஆகியவை பற்றிய உறுதிப்பாட்டை அளிக்கின்றன.

மூன்றாவதாக, நாம் *களைப்பற்ற உறுதிப்பாட்டுடன்* பதில் அளிக்கக் கடவோம். நாம் தேவனுடைய இராஜ்யத்தில் வாழ்வதற்கும், தேவனுடைய இராஜ்யத்தின் செய்தியைப் பிரசங்கிப்பதற்கும் நம்மையே அர்ப்பணிப்பவர்களாய் இருக்க வேண்டும். இயேசுவின் மூலமாக நாம் அவருடைய இராஜ்யத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ளோம் (கொலோ. 1:13). யாரோ ஒருவர் கூறியபடி, “நாம் பரலோகம் செல்ல முயற்சிக்கின்ற இவ்வுலகக் குடிமக்களாயிருப்பதில்லை; நாம் இவ்வுலகத்தினூடாகக் கடந்து செல்ல முயற்சிக்கின்ற பரலோகத்தின் குடிமக்களாய் இருக்கின்றோம்.” நாம் பரலோக இராஜ்யத்தைச் சேர்ந்தவர்களாய் இருக்கின்றோம், மற்றும் நாம்

மற்ற மக்களுக்கு இராஜ்யத்தை விரிவாக்கும் ஊழியத்தில் ஈடுபட்டவர் களாய் இருக்க வேண்டும்.

## முடிவுரை

பரிசுத்த ஆவியானவர் அற்புதமாய்ப் பொழிந்தருளப்பட்ட நிகழ்ச்சி யானது, சபையின் அர்த்தத்தை எல்லா மக்களுக்கும் உறுதிப்படுத்துகிறது. வசனங்களின் போதனைக்கு உண்மையுடன் இருத்தல் என்பது, நாம் அப். 2ஐ யோவேல் தீர்க்கதரிசன நிறைவேற்றம் என்ற வகையில் காண வேண்டும் என்பதாக நம்மைக் கேட்டுக் கொள்ளுகின்றது. பழைய ஏற்பாட்டுத் தீர்க்க தரிசனங்களில் இராஜ்யம் பற்றிய கருத்து வலியுறுத்தப்படுவதன் காரண மாக, நீண்ட காலமாக எதிர்பார்க்கப்பட்டிருந்த இராஜ்யத்தின் வருகை யுடன், பெந்தெகொஸ்தே நாளன்று "கடைசி நாட்கள்" தொடங்கின.

வரலாற்றுப் புகழ்பெற்ற இந்த பெந்தெகொஸ்தே நாளன்று மக்கள், சபையாகிய இராஜ்யத்திற்குள் பிரவேசித்த அதே வழிமுறையிலேயே நாம் இன்றைக்கும், அதற்குள் பிரவேசிக்கின்றோம். பேதுருவின் பிரசங்கத்தைக் கேட்டிருந்த மக்கள், விசுவாசத்துடன், "நாங்கள் என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்டார்கள் (அப். 2:37). அவர் (பேதுரு) பரிசுத்த ஆவியானவரால் இயக்கப்பட்டவராய், ''நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவ மன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்'' (அப். 2:38) என்று பதில் அளித்தார். அவருடைய வார்த்தையை ஏற்றுக் கொண்ட மூவாயிரம் பேர் ஞானஸ்நானம் பெற்றனர். தேவனுடைய இராஜ்யத்தில் பிரவேசித்திருந்த அவர்கள், அப்போஸ் தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம் செய்வதிலும் உறுதியாய்த் தரித்திருந்தனர் (அப். 2:42).

ஹார்டிங் பல்கலைக் கழகத்தில் எனது மாணவர்களிடத்தில் நான் அடிக்கடி, அவர்களின் இடங்களை, மற்ற இளைஞர்கள் பெற்றுக் கொள்ள முடிந்தால் மகிழ்வடைவார்கள் என்று கூறுவதுண்டு. ஒவ்வொரு ஆண்டிலும் மாணவர்கள் போதிய நிதி வசதியில்லாத காரணத்தினால் ஹார்டிங் பல்கலைக் கழகத்தில் சேர முடியாமல் போய் விடுகின்றது. அவர்களுக்கு யாரேனும் பணம் கொடுத்து, அவர்கள் வந்து சேர முடிந்ததென்றால், அந்த வாய்ப்பை அவர்கள் எவ்வளவாய் அனு கூலப்படுத்திக் கொள்வார்கள்! பழைய ஏற்பாட்டுக் காலத்தில் தகுதியுள்ளவர்களாய் இருந்தவர்கள் தாங்கள் காண ஏங்கிய வரப்போகிற இராஜ்யம் பற்றிப் போதுமான அளவு அறிந்திருந்தனர். அதில் ஒரு அங்கமாய் இருக்க வேண்டுமென்று அவர்கள் மிகவும் விரும்பினர், ஆனால் அவர்களுக்கு அந்த சிலாக்கியம் கொடுக்கப்படவில்லை. அது நமக்கு அளிக்கப்பட்டுள்ளது. நாம் ''கடைசி நாட்களின்'' யுகத்தில் வாழ்ந்து கொண்டுள்ளோம், இது இராஜ்யம் இருக்கின்ற நிலையில், உயர்வான மற்றும் வழக்கத்திற்கு மாறான சலுகையை உடையதாக இருக்கின்றது. நாம் காண்பதைக் காண விரும்பிய மற்றும் நாம் பெற்றுள்ள வாய்ப்புக்களைப்

*பெற விரும்பிய பழைய ஏற்பாட்டுக் காலத்திய மக்களைப்பற்றிச் சிந்தித்துப் பாருங்கள்!*

*நீங்கள் தேவனுடைய இராஜ்யத்திற்குப் புறம்பே இருந்தால், அவருடைய இராஜ்யத்திற்குள் பிரவேசிக்கவும் உங்கள்மீது பொழியப்பட்ட கிருபையை இருதய நடுக்கத்துடனும் நன்றியுணர்வுடனும் பெற்றுக் கொள்ளவும் விரையுங்கள். நீங்கள் அவருடைய இராஜ்யத்திற்குள் பிரவேசித்திருந்தால், "உலகம் எப்படியாகி விட்டது, எந்த நிலைக்கு வந்து விட்டது பாருங்கள்!" என்று வருத்தமாய்க் கூறிக் கொண்டு நில்லாமல், "உலகத்திற்கு என்ன வந்துள்ளது என்று பாருங்கள்!" என்று அகமகிழ்வுடன் ஆச்சரியப்படுங்கள்.*

## படித்தல் மற்றும் கலந்துரையாடலுக்கான கேள்விகள்

1. *இந்தப் பாடத்தின் தொடக்கத்தில் விவாதிக்கப்பட்ட மூன்று வகைத் தீர்க்கதரிசனங்களை அடையாளப்படுத்தவும். அவை ஒவ்வொன்றிற்கும் எடுத்துக்காட்டு தரவும்.*
2. *"கடைசி நாட்கள்" என்பதை விவரிக்கவும்.*
3. *யோவேலின் தீர்க்கதரிசனம் எவ்விதத்தில் ஒரு இரட்டைத் தீர்க்கதரிசனமாய் இருக்கலாம் என்பதை கலந்துரையாடவும்.*
4. *அப்போஸ்தலர்களுக்குப் பரிசுத்த ஆவியானவர் வாக்களிக்கப்பட்டதைச் சுட்டிக்காட்டும் வேத வசனங்களை அட்டவணைப்படுத்தவும்.*
5. *பெந்தெகொஸ்தே நாளன்று பரிசுத்த ஆவியானவர் பொழிந்தருளப்பட்டதை விவரிக்கவும்.*
6. *யோவேலின் தீர்க்கதரிசனம் எல்லாம் பெந்தெகொஸ்தே நாளன்று நிறைவேற்றப்பட்டதா?*
7. *"தீர்க்கதரிசியாகிய யோவேலினால் உரைக்கப்பட்டபடியே இது நடந்தேறுகிறது" என்று பேதுரு கூறிய பொழுது, அவர் அர்த்தப்படுத்தியது என்ன?*
8. *யோவேல் தீர்க்கதரிசனத்தில் உள்ள, "யாவர் மேலும்" என்ற வார்த்தைகளை நீங்கள் எவ்வாறு புரிந்து கொள்ளுகின்றீர்கள்?*
9. *அற்புதங்களின் யுகம் எப்பொழுது ஒழிந்து போயிற்று?*
10. *அப். 2வது அதிகாரம் சக்கர அச்சின் மையம் போன்ற அதிகாரமாக உள்ளது ஏன்?*
11. *யோவேலின் தீர்க்கதரிசன நிறைவேற்றத்திற்கு நாம் எவ்வாறு பதில்செயல் செய்ய வேண்டும்?*
12. *தேவனுடைய இராஜ்யத்தினுள் நாம் எவ்வாறு பிரவேசிக்கின்றோம்?*
13. *தேவனுடைய சபையினுள் நாம் எவ்வாறு பிரவேசிக்கின்றோம்?*